**புதுடில்லியில் (08.02.2012 (ம) 09.02.2012) மத்திய அரசின் உணவு பாதுகாப்பு மசோதா குறித்த விவாத கூட்டத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்களின் உரை**

மாண்புமிகு மத்திய உணவுத் துறை அமைச்சர் அவர்களே, பிற மாநில மாண்புமிகு உணவு அமைச்சர்கள் அவர்களே, இங்கு வருகை புரிந்திருக்கும் இதர முக்கிய பிரமுகர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

மத்திய அரசு அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தினை நவீனப்படுத்துவது / கணிணி மயமாக்குவது குறித்து விவாதிக்க இந்த கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. பெருமைக்குரிய இந்த கூட்டத்தில் பல ஆண்டுகளாக தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் காணப்படும் பல குறைபாடுகளை சுட்டிக்காட்டி இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து எங்களது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்த அச்சங்களை இந்த பெருமைக்குரிய சபையின் முன் வைக்க விரும்புகிறேன். இந்த வாய்ப்பின் மூலம் எங்களது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்த நிலைப்பாட்டினை மீண்டும் வலியுறுத்துவதுடன் அதற்கான விபரங்களை மீண்டும் மறு ஆய்வு செய்து மத்திய அரசு அதன் முடிவினை மறு ஆய்வு செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டம் ( Universal Public Distribution System ) நகரப் பகுதி மற்றும் கிராமப் பகுதி என்ற வேறுபாடின்றி தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் முன்னுரிமை குடும்பங்கள் மற்றும் பொது வகை குடும்பங்கள் என்ற வகைப்பாட்டினை ஏற்படுத்துகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் கிராமப்புற மக்கள் தொகையில் 75% பேருக்கும், நகர்புற பகுதி மக்கள் தொகையில் 50% பேருக்கும் மட்டுமே பயன் அளிக்கும். மேலும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக திட்டம் கிராமப்புற குடும்பங்களில் 46% குடும்பங்களையும் , நகர்புற குடும்பங்களில் 28% குடும்பங்களை முன்னுரிமை வகை குடும்பங்களாகவும் நிர்ணயம் செய்து அவற்றிற்கு பயன் அளிக்கும். 29% கிராமப்புற குடும்பங்களும் , 22% நகர்புற குடும்பங்களும் பொது வகை குடும்பங்களாக நிர்ணயிக்கப்பட்டு அவற்றிற்கு பயன் அளிக்கும். பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதன் நோக்கமே “ அனைவருக்கும் உணவு ‘‘ என்ற நிலையினை உறுதி செய்வதற்குத் தான் . எனவே குடும்பங்களில் வகைப்பாட்டினை அறிமுகப்படுத்தினால் அது இந்த கோட்பாட்டினை முறியடிப்பதுடன் குழப்பத்தினை ஏற்படுத்தும் என்பதனை அனைவரும் ஒத்துக்கொள்வீர்கள் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். தற்போது தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டம் மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. மத்திய அரசு செயல்படுத்த உள்ள இலக்கு

நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் சமூதாயத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு தற்போது கிடைத்து வரும் இந்த பலனை கிடைக்கவிடாமல் செய்து விடும்.

உணவு பாதுகாப்பு சட்டத்தில் கற்பினி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாலூட்டும் தாய்மார்களுக்கு இலவச உணவும் , ஊட்டச்சத்து வழங்குதல் , குழந்தைகளுக்கு உள்ளூர் அங்கன்வாடிகள் மூலம் சத்தாண உணவை இலவசமாக வழங்குதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு மையங்கள் மூலம் இலவச உணவு வழங்குதல் , ஊட்டசசத்து இல்லாத குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைவினை குழந்தைகள் நிர்வாகம் மூலம் தடுத்தல், புலம்பெயரும் மக்கள் , பசியால் வாடும் மற்றும் வாடக்கூடிய நிலையில் உள்ளவர்கள் ஆகியோருக்கு சத்துணவு அளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத்தில் இதற்கு குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகள் தெளிவற்றதாகவும் , பேராவல் மிக்கதாகவும் மற்றும் பயனாளிகளை கண்டறிவது மிகவும் கடினமாகவும் இருக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் தமிழ் நாட்டில் பல நலத் திட்டங்கள் ஏற்கனவே சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 5,24,000 எண்ணிக்கையிலான கருவுற்ற தாய்மார்கள் , குழந்தைகளுக்கு பாலூட்டும் தாய்மார்களுக்கும் 11,40,000 எண்ணிக்கையிலான 5 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காக பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதற்கு அரசுக்கு ஆகும் செலவு ஆண்டொன்றுக்கு ரூ 1,300 கோடியாகும். இது தவிர 24,00,000 எண்ணிக்கையிலான முதியோர் , ஆதரவற்றோர், விதவைகள் , கைவிடப்பட்ட விதவைகள், விவசாய தொழிலாளர்கள் , மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு மாதம் ரூ.1000 நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் அரசுக்கு ஆகும் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.2,800 கோடி ஆகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் செயல்படும் தமிழக அரசு ஏற்கனவே பல்வேறு வகையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில் தமிழகம் நலத்திட்டங்கள் செயல்பாட்டில் முன்னனியில் உள்ளது. தற்போது மைய அரசு அறிமுகப்படுத்தும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டங்களின் செயல்பாட்டிற்கும் ஊட்டச்சத்து அளிக்கும் நலத்திட்டங்களுக்கும் முட்டுக்கட்டையிடும் வகையில் அமைந்துள்ளது.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் உணவுத் தகுதி விதிகளை செயல்படுத்தவும் , உணவுத் தகுதி மறுக்கப்படும் இனங்களில் உணவு பாதுகாப்புப் படியை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் குறைதீர் பிரிவு , மாநில அளவில் உணவு பாதுகாப்பு ஆணையம் ஆகியவற்றை அமைக்க வழிவகை செய்கிறது. மேலும் ஒவ்வொரு நியாயவிலை அங்காடிக்கும் விழிப்பு பணிக்குழு அமைக்கவும் , கிராம சபை மூலம் சமூகத் தணிக்கை மேற்கொள்ளவும் விதிமுறைகளை கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நியாயவிலை அங்காடிக்கும் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கான ஒதுக்கீடு , நுகர்வு , குடும்ப அட்டைகள் ஆகியவற்றின் விபரங்கள் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை அதாவது சுதந்திர தினம் மற்றும் காந்தி ஜெயந்தி அன்று நடத்தப்படும் கிராம சபை கூட்டங்களில் சமூகத் தணிக்கைக்கு வைக்கப்படுகின்றன. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் செயல்முறைகளிலிருந்து இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளுக்கு மாறுவதாக இருந்தால் அது மிகுந்த செலவினத்தை ஏற்படுத்துவதுடன் எந்த வகையிலும் பொது விநியோகத் திட்டத்தினை மேம்படுத்துவதற்கு அது உதவாது. இதற்காக மேற்கொள்ளப்படும்

கூடுதல் செலவினம் எந்த வகையிலும் ஏழை மக்களுக்கு பயனை அளிக்காது என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வீர்கள் என்பதை நான் நம்புகிறேன்.

இதே போன்று இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் அவற்றின் எல்லைக்குள் நியாயவிலை அங்காடிகளை நடத்தும் பொறுப்பினை பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்களுக்கு வழங்க வழி செய்கிறது. தமிழ் நாட்டில் பல ஆண்டு காலமாக கூட்டுறவு சங்கங்களும் , தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நியாயவிலை அங்காடிகளை திறம்பட நடத்தி வருகின்றன. இந்த நடைமுறையை மாற்றினால் அது பொது விநியோகத் திட்டத்தினை பெருமளவில் பாதித்து விடும். இந்த கூட்டத்தில் மதிப்பிற்குரிய உச்சநீதி மன்றம் வலியுறுத்தியவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்ட பணிகளை மேம்படுத்துவதற்கு அவைகளின் பல்வேறு பணிகளை கணிணி மயமாக்குவதற்கு கால நிர்ணயம் செய்வது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது. இந்நிலையில் ஏற்கனவே தமிழக அரசு பொது விநியோகத் திட்டத்தினை கணிணி மயமாக்குவதற்கு ரூ 700 கோடி செலவு மதிப்பீட்டில் திட்டம் தயாரித்து மத்திய அரசின் நிதி உதவிக்காக அனுப்பியுள்ளதை இந்த கூட்டம் கணக்கில் எடுத்துக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டத்தில் குடும்ப அட்டைகள் வழங்குதல், அவற்றில் மாற்றங்களை குறித்தல் , அத்தியாவசியப் பொருள்களின் ஒதுக்கீடு ஆணையை வழங்குதல் , புகார்களை உரிய நேரத்தில் தீர்வு செய்வதை கண்காணித்தல் , போலி குடும்ப அட்டைகளை களைதல் , பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல் , குறைகளை திறம்பட களைதல் , அத்தியாவசியப் பொருள்களின் மொத்த மற்றும் சில்லரை விலைகளை கண்காணித்தல் ஆகியவற்றிற்கு வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே பொது விநியோகத் திட்ட பணிகள் தொடக்கம் முதல் இறுதி வரை கணிணி முறையில் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ள திட்டத்தினை மத்திய அரசு கருத்தில் கொண்டு உடனடியாக நிதியுதவி வழங்க வேண்டும்.

அனைவருக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம்

ஏற்படக்கூடிய பயன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் இழக்கக்கூடிய நிலை இருப்பதை சுட்டிக்காட்டி எங்களது மாண்புமிகு தமிழக முதல்வர்கள் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள பல கடித போக்குவரத்துக்கள் விளக்கும். மேலும் மத்திய அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள உணவு பாதுகாப்பு மசோதா குழப்பம் நிறைந்ததாகவும் துல்லிபம் அற்றதாகவும் உள்ளதை எங்களது முதல்வர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளார்கள். மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களும் உணவு தகுதி பெற உரிமை உடையவர்கள் என்பதையும் அவர்களை வகைப்படுத்தும் இந்த முறையை கடுமையாக எதிர்ப்பதாக எங்களது முதல்வர் ஏற்கனவே தெளிவாக தெரிவித்துள்ளார்கள். எங்களது முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியவாறு எங்கள் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் அனைவருக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டம் மாநிலத்தில் அனைத்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் அவர்களால் அது பெரிதும் வரவேற்கப்படுகிறது. அரிசி, கோதுமை, சர்க்கரை அல்லாமல் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவையும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு எங்கள் மாநிலத்தில் வழங்கப்படுகிறது. தற்போது செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் எங்கள் மாநிலத்தில் தற்போது பொது மக்கள் பெற்று வரும் பலனை இழக்கும் நிலையை ஏற்படுத்தி விடும்.

உணவு பாதுகாப்புச் சட்டத்தின் அட்டவணைகளில் திருத்தம் செய்வதற்கும், விதிகளை ஏற்படுத்துவதற்கும் , மாநில அரசுகளுக்கு அறிவுரைகள் வழங்குவதற்கும் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. மாநில அரசுகள் ஆலோசனைகள் தெரிவிப்பதற்கு எந்த வழிவகைகளும் செய்யப்படவில்லை. மக்களுடன் நேரடி தொடர்பு உள்ளவை மாநில அரசுகளே, எனவே அவர்களுக்கு பயன் அளிக்கும் எந்த திட்டத்திலும் உரிய மாற்றங்களை கொண்டு வர அவைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். இச் சட்டத்தில் அத்தகைய விதிமுறைகள் எதுவும் இல்லை. மத்திய அரசின் நிதி பங்களிப்பு குறித்த எந்த உறுதி மொழியும் இச்சட்டத்தில் இல்லை.

மாண்புமிகு எங்களது முதல்வர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ள நிலைப்பாட்டினை மீண்டும் வலியுறுத்தி தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் பொது மக்களுக்கு மிகுந்த பலனை அளித்து வரும் நிலையில் , உணவு பாதுகாப்பு சட்டத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி .

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**